செ.வெ.எண்: 61 நாள்:23.08.2021

பத்திரிக்கை செய்தி

# நாமக்கல் மாவட்டத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

--------

நாமக்கல் மாவட்ட ஆகஸ்ட் 2021-ஆம் மாதத்திற்கான விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் 27.08.2021 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் காணொலி காட்சி மூலம் நடைபெறவுள்ளது.

விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் அந்தந்த வட்டாரங்களில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களிலிருந்து சமூக விலகலை கடைபிடித்தும், முகக்கவசம் அணிந்தும், கைகளை நன்கு சுத்தம் செய்தும் காணொலி காட்சி மூலம் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளைத் தெரிவிக்கலாம். மேலும், கோரிக்கைகள் தெரிவிக்க உள்ள விவசாயிகள் காலை 10.00 மணிக்குள் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் தங்களது பெயரை முன்பதிவு செய்துகொள்ள வேண்டும் என நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் ஸ்ரேயா பி. சிங் இ.ஆ.ப., கேட்டுக்கொண்டுள்ளார்.

ஓம்/-ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
நாமக்கல் மாவட்டம்.